**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO. SC. 258/2017**

**Deposition of P.W.** 12

Name : திரு. ஸ்டீபன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.12.2024

A1, A2 Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்சமயம் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து தற்போது பணி ஒய்வு பெற்று விட்டேன். நான் தக்கலை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 24.08.2012ம் தேதி காலை 06.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது சுவாமியார்மடம், ரெத்தினா மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த விஜு என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் கொடுத்தார். அதனை பதிவு செய்து நிலையம் வந்து 08.00 மணிக்கு புகார்வாக்குமூலத்தின் தன்மைப்படி நிலைய குற்ற எண்.972/2012 பிரிவுகள் 294(பி), 342, 307, 394 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7. அசலை நீதிமன்றததிற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன், காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை எடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சென்று எவ்வித வாக்குமூலமும் பதிவு செய்யவில்லைஎன்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1வது எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேறு இடத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

புகார் வாக்குமூலத்தில் நகையின் மதிப்பு பற்றி குறிப்பிடவில்லை என்றால் பவுன் பற்றி குறிப்பிட்டுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் களவிற்குள்ளான மொத்த சொத்தின் மதிப்பு ரூ.50,000/- என்று குறிப்பிட்டுவிட்டு ரூ.40,000/- என்று அடித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை நான் தான் கைதவறுதலாக எழுதி விட்டேன். திருத்ததின் அருகே எனது சுருக்கொப்பம் எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீதுள்ள விரோதத்தின் காரணமாக புகார்தாருக்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.